**கவனிக்க.**-*2021.01.08 ஆந் திகதிய 2210 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* I *: தொகுதி* III *இல் பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2211 - 2021 ජනවාරි මස 15 වැනි සිකුරාදා - 2021.01.15
*2211 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | 106 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 106 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 108 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2021, பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, சனவரி மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

105 - B 082095 - 405 (2021/01)

## மற்றைய நியமனங்களும் பிறவும்

### வெளிநாட்டு அமைச்சு

*2020, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக திரு. தோமஸ் பிரான்க் டெட்வேலர் அவர்களை கொழும்பிலுள்ள அவுஸ்திரேலியா குடியரசின் கௌரவ கொன்சூலராக அங்கீகரிப்பதில் மாண்புமிகு இலங்கை வெளிநாட்டு அமைச்சர் மகிழ்ச்சியடைந்துள்ளார்.*

அத்மிரால் (பேராசிரியர்) ஜயனாத் கொழும்பகே,
செயலாளர்,
வெளிநாட்டு அமைச்சு.

வெளிநாட்டு அமைச்சு,
“குடியரசுக் கட்டடம்”,
கொழும்பு 01,
2021, சனவரி 07.

1-505

---

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரசாங்க கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரசாங்க கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, பெருந்தோட்ட அமைச்சரான டாக்டர் ரமேஷ் பத்திரண ஆகிய நான், நிதி விடயப் பொறுப்பு அமைச்சரின் இணக்கத்துடன் இக்கட்டளை மூலம்-*

(1) இதன் முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணிகளுக்காக கூட்டிணைக்கப்பட்டுள்ள இந்த கமத்தொழில் அமைப்பு மேற்படி பணிகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாகின்ற கமத்தொழில் அமைப்பொன்றாக குறித்துரைக்கின்றேன்.

(2) மேலே குறிப்பிடப்பட்டுள்ள கமத்தொழில் அமைப்பைத் தாபித்தல் மற்றும் முன்னெடுத்துச் செல்லும் பணிகளுக்கு சந்தைப்படுத்தல் சபை தாபிக்கப்படுகின்றது என்பதை பிரகடனம் செய்கின்றேன்.

(3) மேற்படி சந்தைப்படுத்தல் சபைக்கு “வாசனைச்சரக்கு மற்றும் அது சம்பந்தப்பட்ட உற்பத்திகளை சந்தைப்படுத்தும் சபை” எனும் பெயர் வழங்கப்படுவதுடன் இதன் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் அச்சபையின் குறிக்கோள்களாதல் வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றேன்.

(4) சந்தைப்படுத்தல் சபையின் முக்கியமான வர்த்தக நடவடிக்கையாக இருப்பது வாசனைச்சரக்கு மற்றும் அது சம்பந்தப்பட்ட உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல், அங்கீகாரச் சான்றிதழ்கள் மற்றும் பெறுமதி சேர்த்தல், உற்பத்திகளை ஊக்குவித்தல், புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல் மற்றும் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட சந்தைகளை மேம்படுத்துவதற்காக முறையாக தயார் செய்யப்பட்ட பொறிமுறையைத் தயார் செய்வதாகும் என்றும் பிரதான கமத்தொழில் வர்த்தகச் செயற்பணியை நிறைவேற்றும் இடம் கொழும்பாகும் என்று குறிப்பிடுகின்றேன்.

(5) சந்தைப்படுத்தல் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழு பேர் ஆகும் என்றும் விதித்துரைக்கின்றேன்.

(6) இதன் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒழுங்கமைப்பைக் கொண்ட உறுப்பினர்களை சந்தைப்படுத்தல் சபையின் உறுப்பினர்களாக பிரகடனம் செய்கின்றேன்.

(7) திருமதி குமுதினி குணசேகரவை, சந்தைப்படுத்தல் சபையின் தவிசாளராக நியமனம் செய்கின்றேன்.

டாக்டர் ரமேஷ் பத்திரன (பா.உ.),
பெருந்தோட்ட அமைச்சர்.

பெருந்தோட்ட அமைச்சு,
செத்சிறிபாய (இரண்டாம் கட்டம்),
பத்தரமுல்லை,
2021, சனவரி 15.

## முதலாம் அட்டவணை

கமத்தொழில் அமைப்பினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன-

(1) சகல வாசனைச்சரக்கு வகைகளையும் தரப்படுத்தல், தரப்பரிசோதனை, சான்றுப்படுத்தல் மூலம் மேற்படி உற்பத்திகளுக்கான அங்கீகாரச் சான்றிதழ்களை (Accreditation Certificate) பெற்றுக் கொள்ளத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்தல், ஆலோசனை வழங்குதல், தரச் சான்றிதழ்களை வெளியிடக்கூடிய நிறுவனமாக செயற்படுதல்.

(2) உற்பத்தியாளர்களுக்கு அனுகூலமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கும், வாசனைச் சரக்குகள் மற்றும் அது சம்பந்தப்பட்ட உற்பத்திகளை மென்மேலும் பொருத்தமானவாறு துரிதமான விற்பனை செய்வதற்கும், முடிவுப்பொருட்களின் உற்பத்தியை உக்குவிப்பதற்கும், ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருக்கும் பொருட்டு ஊக்குவிப்புக்களை அமுல்படுத்தல், தனியார் துறை முதலீட்டாளர்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்வனவாளர்களை அறிமுகம் செய்வதும்.

(3) வாசனைச்சரக்கு மற்றும் அது சம்பந்தப்பட்ட உற்பத்திகளின் பெறுமதியை அபிவிருத்தி செய்வதற்கான நிதி ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தல், பெறுமதிசேர்ப்பதற்கான ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கங்களின் (Research and Innovations) மூலம் புதிய உற்பத்திகளை அறிமுகம் செய்தல்.

(4) தற்போதைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், புதிய சந்தைகளைக் கண்டுபிடிப்பதற்கும், அதற்கும் தேவையான சந்தைப்படுத்தல் உபாயமுறைகளை அமுல்படுத்துவதற்கும், உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுக் குழுக்களுடன் கலந்துரையாடி வாசனைச்சரக்கு சந்தைப்படுத்தலை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இரண்டாம் அட்டவணை

இச்சபையின் குறிக்கோள் முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குறிக்கோள்களாக இருக்கும்.

## மூன்றாம் அட்டவணை

சந்தைப்படுத்தல் சபையின் உறுப்பினர்கள்

(1) தலைவர்/பணிப்பாளர்
(2) பிரதம நிறைவேற்று அலுவலர்/பணிப்பாளர்
(3) பணிப்பாளர்கள் - 03
கௌரவ அமைச்சரின் ஆலோசனையின் பேரில் நியமனம் செய்யப்படுகின்ற குறித்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட அறிவைக் கொண்டுள்ள பணிப்பாளர்கள் மூன்று பேர்.
(4) பணிப்பாளர் - பொதுத் திறைசேரியின் பிரதிநிதி அலுவலர் ஒருவர்
(5) பணிப்பாளர் - விடயப் பொறுப்பு அமைச்சரின் பிரதிநிதி அலுவலர் ஒருவர்

# அரசாங்க பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இலக்கங்கள் : 1113028755
கடன் கணக்கு இலக்கங்கள் : 2135788

செய்யட் கான் முஹம்மட் சதத்

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் 2019, நவெம்பர் 29 ஆந் திகதி கூடிய கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பகிரங்க நொத்தாரிசு ஏ. ஏ. எஸ். டி. முணசிங்க அவர்களால் 2017, யூன் 19 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 1143 இடப்பட்ட கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி என்ற பெயருக்கு எழுதப்பட்டதும் ஈட்டுமுறியொன்றின் கீழ் அறவிடப்படவேண்டிய பணத்தொகையை செலுத்துவதற்கு புறக்கணிக்கப்பட்டுள்ளதால், செய்யட் கான் முஹம்மட் சதத் கடனாளியாக புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும், அந்த ஈட்டு முறியின் மீது ஏழு கோடி அறுபத்தாறு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து ஐந்நூற்றி நாற்பத்தி நான்கு ரூபா இருபத்திநான்கு சதம் (ரூபா 7,66,89,544.24) ரூபாவை 2019, ஒற்றோபர் 22 அந் திகதியாகும் போது கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு தற்பொழுது அறவிடப்பட வேண்டிய இருப்பதால் சொல்லப்பட்ட ஏழு கோடி அறுபத்தாறு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து ஐந்நூற்றி நாற்பத்தி நான்கு ரூபா இருபத்திநான்கு சதம் (ரூபா 7,66,89,544.24) ரூபாவை அறவிடுவதற்காக மற்றும் 2019, ஒற்றோபர் 23 ஆந் திகதியிலிருந்து விற்பனை செய்யும் தினம் வரையுள்ள காலத்திற்கு ரூபா 2,06,68,627.67 பணத்தொகையின் மீது வருடத்திற்கு 28% வீதம் மற்றும் ரூபா 4,64,24,000.00 பணத்தொகையின் மீது வருடத்திற்கு 16.50% வீதம், மேலதிகமாக வருடத்திற்கு வட்டியோடு கூடிய பிரச்சார நடவடிக்கைகளுக்கான செலவிடம் செலவினங்கள் மற்றும் வேறு கட்டணங்கள் உட்பட, இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏதாவது பணத்தொகைகள் இருந்தால் அதனைக் குறைத்துக்கொண்டு சொல்லப்பட்ட இலக்கம் : 1143 இடப்பட்ட முறியின் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அடகுவைக்கப்பட்டதும், இங்கு கீழே ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டுள்ளதும், காணி மற்றும் வளாகம் கொழும்பு - 12, ஹல்ஸ்டோப் வீதி, 2 ஆவது மாடி, இல. 200, இடப்பட்ட இடத்தில் அதிகாரம் பெற்ற ஏலதாரியான எல். பி. சேனாநாயக்க அவர்கள் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடனை அறவிடுவதற்கு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சியின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### மேல் சொல்லப்பட்ட ஆதன இடாப்பு

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லையினுள், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் மாளிகாவத்தை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ஸ்ரீ சந்தர்ம மாவத்தையூடாக மாளிகாவத்தை கிழக்கில் அமைந்துள்ள காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. கனகசிங்கம் அவர்களால் 2015.06.26 ஆந் திகதியிடப்பட்ட இல. 4375 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் X என காண்பிக்கப்பட்ட காணிப் பகுதியின் எல்லையாக - வடக்கு: ஸ்ரீ சந்தர்ம மாவத்தை வரிமதிப்பீட்டு இல.: 91 மற்றும் G99 என்ற வளாகம் ; கிழக்கு : ஸ்ரீ சந்தர்ம மாவத்தை ; தெற்கு: ஸ்ரீ சந்தர்ம மாவத்தை வரிமதிப்பீட்டு இல. : G83 மற்றும் 85A என்ற வளாகம் மற்றும் மேற்கு: மாளிகாவத்தை ஜும்மா மஸ்ஜித் வீதி வரிமதிப்பீட்டு இல. : 222/9 மற்றும் 222/8 மற்றும் 222/8A என்ற வளாகம், எல்லையாக மேற்குறித்த இல. : 4375 என்ற வரைபடத்தின் பிரகாம் பதினொன்று தசம் ஒன்பது ஆறு பேர்ச் (0ஏ.0றூ.11.96பே.) விசாலமுடைய காணியோடும், கொழும்பு காணிப் பதிவு அலுவலக இருமடிப்பு தாளின் D/178/144 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

1 - 438

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கங்கள் : 2223613

அப்துல் ஹமீட் முஹம்மட் நசீர்

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் 2019, திசெம்பர் 20 ஆந் திகதி கூடிய கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொச்சிக்கடை பிரசித்த நொத்தாரிசு பி. டி. ஈ. பர்னாந்து அவர்களால் 2014.10.23 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 14254 மற்றும் 2017.04.06 ஆந் திகதியிடப்பட்ட இல. 15807 என்ற கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி என்ற பெயருக்கு எழுதிய ஈட்டுமுறியின் கீழ் பெற்றுக்கொள்ளவேண்டிய பணத்தொகையை அப்துல் ஹமீட் முஹம்மட் நசீர் கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும், (மேற்குறித்த 1 ஆவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட காணி).

கொச்சிக்கடை பிரசித்த நொத்தாரிசு பி. டி. ஈ. பர்னாந்து அவர்களால் 2015.12.18 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 14993, 2016.12.07 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. : 15624, 2017.04.06 ஆந் திகதியிடப்பட்ட இல. : 15805 மற்றும் 2018.07.19 ஆந் திகதியிடப்பட்ட இல.: 16574 என்ற ஈட்டுமுறியின் கீழ் பெற்றுக்கொள்ளவேண்டிய பணத்தொகையை அப்துல் ஹமீட் முஹம்மட் நசீர் கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும், (மேற்குறித்த 2 ஆவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட காணி).

கொச்சிக்கடை பிரசித்த நொத்தாரிசு பி. டி. ஈ. பர்னாந்து அவர்களால் 2017.04.06 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 15806, என்ற கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி என்ற பெயருக்கு எழுதிய ஈட்டுமுறியின் கீழ் பெற்றுக்கொள்ளவேண்டிய பணத்தொகையை அப்துல் ஹமீட் முஹம்மட் நசீர் கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும், (மேற்குறித்த 3 ஆவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட காணி).

சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் கீழ் ஐந்து கோடி தொண்ணூற்று ஆறு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து ஐந்நூற்றி தொண்ணூறு ரூபா இருபத்தேழு சதம் (ரூபா 5,96,68,590.27) ரூபாவை 2019, நவெம்பர் 15 ஆந் திகதியாகும் போது கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு தற்பொழுது அறவிடப்பட வேண்டி இருப்பதால் சொல்லப்பட்ட ஐந்து கோடி தொண்ணூற்று ஆறு இலட்சத்து அறுபத்தெட்டா யிரத்து ஐந்நூற்றி தொண்ணூறு ரூபா இருபத்தேழு சதம் (ரூபா 5,96,68,590.27) ரூபாவை அறவிடுவதற்காக மற்றும் 2019, நவெம்பர் 16 ஆந் திகதியிலிருந்து விற்பனை செய்யும் தினம் வரையுள்ள காலத்திற்கு 5,10,00,000.00 பணத்தொகையின் மீது வருடத்திற்கு 15.0% வீதம், மேலதிகமாக வருடத்திற்கு வட்டியோடு கூடிய பிரச்சார நடவடிக்கைகளுக்கான செலவிடம் செலவினங்கள் மற்றும் வேறு கட்டணங்கள் உட்பட, இதுவரைபெற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஏதாவது பணத்தொகைகள் இருந்தால் அதனைக் குறைத்துக்கொண்டு சொல்லப்பட்ட இலக்கம் : 14254, 15807, 14993, 15624, 15805, 16574 மற்றும் 15806 இடப்பட்ட ஈட்டுமுறியின் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் என்ற பெயருக்கு அடகுவைக்கப்பட்டதும், இங்கு கீழே 1ஆவது, 2 ஆவது மற்றும் 3 ஆவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டுள்ளதும், காணி மற்றும் வளாகம், கொழும்பு - 12, ஹல்ஸ்டோப் வீதி, 2 ஆவது மாடி, இல. : 200 இடப்பட்ட இடத்தில் அதிகாரம் பெற்ற ஏலதாரியான எல். பி. சேனாநாயக்க அவர்கள் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடனை அறவிடுவதற்கு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சியின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### மேல் சொல்லப்பட்ட 1 ஆவது ஆதன இடாப்பு

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குளியாபிட்டிய பதிவு அலுவலகப் பிரிவினுள் கடுகம்பொல ஹத்பத்துவ யாகம் பத்து கோரளை உடபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் யாகம்வெல கிராம அலுவலர் பிரிவினுள் யாகம்வெல கிராமத்தில் அமைந்துள்ள கும்புக்கஹவத்த மற்றும் மைலகஹஹென என்ற பெயருடைய காணிக்கு ஜே. ஏ. ரோஹித ஜயலத் எல். எஸ், அவர்களால் 2014.05.19 ஆந் திகதியிடப்பட்ட இல. 783B என்ற வரைபடத்தின் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 2 என காண்பிக்கப்பட்ட காணிப் பகுதிக்கு எல்லையாக : வடக்கு: இல. : 287 என்ற வரைபடத்தின் லொட் இல. : 02 பிரிக்கப்பட்ட ஜீவ வெட ; கிழக்கு : முன்னர் எச். எம். கருணாதாசவின் மற்றும் தற்பொழுது சிறிவர்தனயின் காணி ; தெற்கு : இல.: 783B என்ற வரைபடத்தின் லொட் இல. : 3 மற்றும் மேற்கு : இல.: 783B என்ற வரைபடத்தின் லொட் இல. : 01 எல்லையின் வரைபடத்தின் பிரகாரம் ஒரு றூட், பதினொன்று தசம் நான்கு பேர்ச் (0ஏ.1றூ.11.4பே.) விசாலமுடைய காணியோடு. இது குளியாபிட்டிய காணிப் பதிவு அலுவலகத்தில் A 38/101 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குளியாபிட்டிய பதிவு அலுவலகப் பிரிவினுள் கடுகம்பொல ஹத்பத்துவ யாகம் பத்து கோரளை உடபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் யாகம்வெல கிராம அலுவலர் பிரிவினுள் யாகம்வெல கிராமத்தில் அமைந்துள்ள கும்புக்கஹவத்த மற்றும் மைலகஹஹென என்ற பெயருடைய காணிக்கு ஜே. ஏ. ரோஹித ஜயலத் எல். எஸ், அவர்களால் 2014.05.19 ஆந் திகதியிடப்பட்ட இல. 783B என்ற வரைபடத்தின் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 3 என காண்பிக்கப்பட்ட காணிப் பகுதிக்கு எல்லையாக : வடக்கு: இல. : 783B என்ற வரைபடத்தின் லொட் இல. : 1 மற்றும் லொட் 2 ; கிழக்கு : முன்னர் எச். எம். கருணாதாசவின் மற்றும் தற்பொழுது சிறிவர்தனயின் காணி ; தெற்கு : முன்னர் எம். எம். இஸ்மாயில் மற்றும் தற்பொழுது முஹம்மட் சுலைமா மற்றும் அப்துல் ஹமீதுவின் காணி மற்றும் மேற்கு : தும்மலசூரியவில் இருந்து யாகம்வெல வரை பிரதேச சபை வீதி, எல்லையின் வரைபடத்தின் பிரகாரம் ஒரு றூட் பதினேழு தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச் (0ஏ.1றூ.17.90பே.) விசாலமுடைய காணியோடு. இது குளியாபிட்டிய காணி பதிவு அலுவலகத்தில் A 38/102 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### மேல் சொல்லப்பட்ட 2 ஆவது ஆதன இடாப்பு

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், தமிழ் ஹத்பத்துவ குமாரபள்ளம் பத்துவ, ஆனமடுவ பிரதேச சபை எல்லையினுள் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவினுள், சன்குட்டிகுளம் என்ற கிராம அலுவலர் பிரிவினுள் சன்குட்டிகுளம் கிராமத்தில் அமைந்துள்ள சன்குட்டிகுளஹேன என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஏ. ஏ. விமலசேன அவர்களால் 2001.10.18 ஆந் திகதியிடப் பட்ட இல.: 2605 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 01 என காண்பிக்கப்பட்ட காணி பகுதியின் எல்லையாக- வடக்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் FVP 1839 லொட் 131; கிழக்கு: FVP 1839 லொட் 132, 137 1/2 மற்றும் 138; தெற்கு : FVP 1839 லொட் 77 மற்றும் 103 மற்றும் மேற்கு : வீதி, மேற்குறித்த இல. : 2605 என்ற வரைபடத்தின் பிரகாரம் இருபத்தொரு ஏக்கர் இரண்டு றூட் பதினான்கு பேர்ச் (21ஏ.2றூ.14பே.) விசாலமுடைய காணியோடு. கட்டிடம், இலை, குலை பயிர்ச்செய்கை அனைத்தும்.

கீழே குறிப்பிடப்பட்ட காணி மீண்டும் அளந்தவையாகும் :

மேற்குறித்த சன்குட்டிகுளம் கிராமத்தில் அமைந்துள்ள சன்குட்டிகுலஹேன என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் 1910.04.18 ஆந் திகதியிடப்பட்ட இல. : 269295 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லையாக : வடகிழக்கு : சன்குட்டிகுளம்; தென்கிழக்கு : அரசாங்க வனம் ; தென்மேற்கு : விசேடமாக பிரிக்கப்பட்ட மற்றும் அரசாங்க காடு மற்றும் வயம்ப : விசேடமாக பிரிக்கப்பட்ட மற்றும் அரசாங்க காடு, மேற்குறித்த இல. : 269295 என்ற வரைபடத்தின் பிரகாரம் இருபத்தொரு ஏக்கர் இரண்டு றூட் பதினான்கு பேர்ச் (21ஏ.2றூ.14பே.) விசாலமுடைய காணியோடு. கட்டிடம், இலை, குலை பயிர்ச்செய்கை அனைத்தும். இந்த காணி புத்தளம் காணி பதிவு அலுவலகத்தில் இருமடிப்புத்தாள் J 11/33 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மேல் சொல்லப்பட்ட 3 ஆவது ஆதன இடாப்பு**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கடுகம்பொல ஹத்பத்துவ, யாகம் பத்துவ கோரளை, உடபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவினுள் உடபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவினுள் பஹல யாகம்வெல கிராம அலுவலர் பிரிவினுள் யாகம்வெல அமைந்துள்ள மைலகஹஹெ‌ன, கொன்கஹஹேன, கொன்கஹவத்த மற்றும் கொன்கஹஹெ‌ன என்ற பெயருடைய குளியாபிட்டிய மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. : 10654/ P, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஆர். பி. நவரத்ன அவர்களால் 2006.08.10 ஆந் திகதியிடப்பட்ட இல. : 5270 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 02B என காண்பிக்கப்பட்ட காணி பகுதியின் எல்லையாக - வடக்கு: இல.: 419331 என்ற வரைபடத்தின் லொட் 98A ; கிழக்கு : இல. : 5270 என்ற வரைபடத்தின் லொட் 2C ; தெற்கு : இல. : 5270 என்ற வரைபடத்தின் லொட் 8 மற்றும் மேற்கு : இல. : 5270 என்ற வரைபடத்தின் லொட் 2 A, மேற்குறித்த இல. : 5270 என்ற வரைபடத்தின் பிரகாரம் ஒரு றூட் முப்பத்திநான்கு பேர்ச் (0ஏ.1றூ.34பே.) விசாலமுடைய காணியோடும். கட்டிடம், இலை, குலை பயிர்ச்செய்கை அனைத்தும், இந்த காணி குளியாபிட்டிய காணிப் பதிவு அலுவலகத்தில் இருமடிப்பு தாள் J 79/ 11 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது..

கீழே காண்பிக்கப்பட்ட காணியோடு பாதை உரிமையோடும்:

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கடுகம்பொல ஹத்பத்துவ, யாகம் பத்துவ கோரளை, உடபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவினுள் உடபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவினுள் பஹல யாகம்வெல கிராம அலுவலர் பிரிவினுள் யாகம்வெல அமைந்துள்ள மைலகஹஹெ‌ன, கொன்கஹவத்த மற்றும் கொன்கஹஹெ‌ன என்ற பெயருடைய குளியாபிட்டிய மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. : 10654/P, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஆர். பி. நவரத்ன அவர்களால் 2006.08.10 ஆந் திகதியிடப்பட்ட இல. : 5270 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 08 என காண்பிக்கப்பட்ட காணி பகுதியின் எல்லையாக : வடக்கு : லொட் 106 (P. P. 407327) மற்றும் இல. 5270 என்ற வரைபடத்தின் லொட் 01 மற்றும் 02 ; கிழக்கு : மேற்குறித்த இல. : 5270 என்ற வரைபடத்தின் லொட் 3 ; தெற்கு : மேற்குறித்த இல. : 5270 என்ற வரைபடத்தின் லொட் 4, 5 மற்றும் 7 மற்றும் மேற்கு : கொரகஹவெடிய இருந்து யாகம்வெல வரை பிரதேச சபை வீதி, மேற்குறித்த இல. : 5270 என்ற வரைபடத்தின் பிரகாரம் இருபத்திரண்டு தசம் இரண்டு ஏழு நான்கு பேர்ச் (0ஏ.0றூ.22.274பே.) விசாலமுடைய காணியோடும். கட்டிடம், இலை, குலை பயிர்ச்செய்கை அனைத்தும், இது குளியாபிட்டிய காணி பதிவு அலுவலகத்தில் இருமடிப்புத் தாள் A 101/172 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது..

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

1 - 439

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல்.சீ.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இலக்கம் : 1115020503
கடன் கணக்கு இலக்கங்கள் : 2238773, 1958554, 2362563, 2362554 மற்றும் 2297410

மொஹமட் தாசிம் மொஹமட் சிராஜ்

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் 2019, செத்தெம்பர் 27 ஆந் திகதி கூடிய கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானித்ததாவது.

கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு K. V. A. D. C. K. விபுலசேன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.11.27 ஆந் திகதிய 1699 ஆம் இலக்க, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு S. D. பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.08.23 ஆந் திகதிய 127 ஆம் இலக்க மற்றும் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு K. V. A. D. C. K. விபுலசேன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.11.23 ஆந் திகதிய 2203 ஆம் இலக்க மற்றும் 2019.02.05 ஆந் திகதிய 2544 ஆம் இலக்க கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC முறிகளின் கீழ் மொஹமட் தாசிம் மொஹமட் சிராஜ் என்பவர் கடப்பாடுடையவராக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ள பணத்தொகையை செலுத்த தவறியமையால் (இதன்கீழ் 1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்.)

கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு H. M. D. H. கிரிந்த என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.06.05 ஆந் திகதிய 3114 ஆம் இலக்க முறியின் கீழ் மொஹமட்

தாசிம் மொஹமட் சிராஜ் என்பவர் கடப்பாடுடையவராக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ள பணத்தொகையை செலுத்த தவறியமையால் (இதன் கீழ் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்.)

குருநாகலைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு S. B. P. T. S. பத்திரன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.03.28 ஆந் திகதிய 659 ஆம் இலக்க முறியின் கீழ் மொஹமட் தாசிம் மொஹமட் சிராஜ் என்பவர் கடப்பாடுடையவராக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ள பணத்தொகையை செலுத்த தவறியமையால் (இதன் கீழ் 3 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்.)

அம்முறிகளின் கீழ் நாற்பத்தாறு கோடி பதினாறு இலட்சத்து எண்பத்தையாயிரத்து நூற்று அறுபத்து இரண்டு ரூபா பதினெட்டு சதம் (ரூபா 46,16,85,162.18) பணத்தொகை 2019.08.22 ஆந் திகதியன்று உள்ளவாறு கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளதாலும் மேற்படி நாற்பத்து மூன்று கோடி இருபத்தொரு இலட்சத்து நாற்பத் தேழாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றொன்பது ரூபா (ரூபா 43,21,47,899.00) பணத்தொகையும் 2019.08.23 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை காலத்துக்கான ரூபா 6,28,28,899.00 பணத்தொகைக்கு 28% வருடாந்த வட்டியும், ரூபா 6,42,00,000.00 பணத்தொகைக்கு 13.84% வருடாந்த வட்டியும், ரூபா 5,76,19,000.00 பணத்தொகைக்கு 14% வருடாந்த வட்டியும், ரூபா 16,75,00,000.00 பணத்தொகைக்கு 14.34% வருடாந்த வட்டியும் மற்றும் ரூபா 8,00,00,000.00 பணத்தொகைக்கு 15.84% வருடாந்த வட்டியும், விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையேனும் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுபவையும் 1699, 127, 2203, 2544, 3114 மற்றும் 659 ஆம் இலக்க முறிகளினால் மேற்படி கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான பின்வரும் 1 ஆம், 2 ஆம் மற்றும் 3 ஆம் அட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களும் வளவுகளும் கண்டி, மாவில்மட, லேவெல்ல ரோட், துட்டுகெமுனு மாவத்தையில் இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. I. W. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சியின் பணிப்பாளர் சபையினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

### மேற்கூறிய முதலாம் ஆதனத்தின் அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஹப்புத்தளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 63E ஹொரதொருவ கிராம அலுவலர் பிரிவு, உடுகிந்த பிரிவு, மஹபலாத்த கோரளை ஹப்புதலேகமயில் அமைந்துள்ள "கந்தேஅராவே எஸ்டேட் தற்போது ஊவா ஹப்புதலே டீ கம்பனி" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் R. A. W. N. ஜயதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1967.11.13 ஆந் திகதிய 108 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : ஓய மற்றும் வயலை பிரிக்கும் பள்ளத்தாக்கு மற்றும் வடிகால் ; கிழக்கு : வயலை பிரிக்கும் ஓடை ; தெற்கு : பாலுகம மற்றும் பொரலந்தையிலிருந்து ஹப்புதளைக்கு செல்லும் P. W. D. பாதை மற்றும் மேற்கு : பள்ளத்தாக்கு இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், மற்றும் சகலதுமாகும். இது இரண்டு ஏக்கர், மூன்று றூட், ஒரு பேர்ச் (2ஏ.3றூ.1பே.) பரப்பளவானது.

காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் R.A.W.N. ஜயதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1967.11.13 ஆந் திகதிய 108 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டவாறு தொழிற்சாலையின் தொழிற்பாட்டிற்கு தற்போது உபயோகத்திலுள்ள சகல இயந்திர உபகரணங்கள், இணைப்புக்களும் உள்ளடக்கப்படும்.

மேலும் இது பதுளை காணிப் பதிவகத்தில் W 03/124 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேல் குறிப்பிடப்பட்ட காணியானது அண்மையில் செய்யப்பட்ட அளவையின் பிரகாரம் உரிமம் பெற்ற நில அளவையாளர் S. G. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.01.28 ஆந் திகதிய 4195 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஹப்புத்தளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 63E ஹொரதொருவ கிராம அலுவலர் பிரிவு, உடுகிந்த பிரிவு, மஹபலாத்த கோரளை ஹொரதொருவ கிராமத்தில் அமைந்துள்ள "கந்தேஅராவே எஸ்டேட்" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் S. G. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.01.28 ஆந் திகதிய 4195 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டின் எல்லைகள் : வடக்கு : ஓய மற்றும் வயலை பிரிக்கும் பள்ளத்தாக்கு மற்றும் வடிகால் ; கிழக்கு : ஓடை (மேட்டுநிலம் மற்றும் வயலுக்கு உரிமம் கோரும் S. மத்தும பண்டார) ; தெற்கு : பாதை (H) மற்றும் மேற்கு : பள்ளத்தாக்கு இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் S. P. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.01.28 ஆந் திகதிய 4195 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் இரண்டு ஏக்கர், இரண்டு றூட், பதினைந்து தசம் ஆறு பூச்சியம் பேர்ச் (2ஏ.2றூ.15.60பே.) பரப்பளவானது அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், தேயிலை தொழிற்சாலை, தேயிலை பயிர்செய்கை, தேயிலை தொழிற்சாலையின் தொழிற்பாட்டிற்கு தற்போது உபயோகத்திலுள்ள சகல இயந்திர உபகரணங்கள், இணைப்புக் களும் உள்ளடக்கப்படும்.

### மேற்கூறிய இரண்டாம் ஆதனத்தின் அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பந்தாவ கிராம அலுவலர் பிரிவு உடபொல ஓதொட்ட கோரளை தம்பதெனி ஹத்பத்துவ பந்தாவ கிராமத்தில் அமைந்துள்ள "கஹட்டகஹமுல கும்புரே வகலே கிழக்கு பக்கத்தின் பில்லேவ" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் R. N. கருணாதிலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.01.02 ஆந் திகதிய 1365 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 02 காணித்துண்டின் எல்லைகள் : வடமேற்கு : பிரதான பாதையிலிருந்து செல்லும் பாதை ; வடகிழக்கு : மேற்கூறிய வரை படத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 ; தென்கிழக்கு : M. S. செம்சுன் என்பவருக்குச் சொந்தமான காணியின் வேலி உரிமம் பெற்ற நில அளவையாளர் W. M. P. B. விஜேகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 11/92 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 02) மற்றும் தென்மேற்கு :

மேற்கூறிய 1365 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 03 பிரதான பாதைக்கு செல்லும் பாதை எனும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலதுமாகும். இது பத்து தசம் எட்டு மூன்று பேர்ச் (00ஏ.00றூ.10.83பே.) பரப்பளவுடையது. இது குருநாகல் காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் T 03/69 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### மேற்கூறிய மூன்றாம் ஆதனத்தின் அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 922 பந்தாவ கிராம அலுவலர் பிரிவு உடபொல ஓதொட்ட கோரளை தம்பதெனி ஹத்பத்துவ பந்தாவ கிராமத்தில் அமைந்துள்ள வரிப்பண இல. 110, 112 மற்றும் 112/ 1 எனும் மில்லகஹமுலவத்த, கெட்டகெலகஹமுலவத்த மற்றும் வெவிலியத்தே கும்புர தற்போது கார்ட்ன் தற்போது குருநாகல் ஒய்ல் மில்ஸ் எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் G. S. கலகெதர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.07.23 ஆந் திகதிய 5859 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : கிராமவாசிகளின் காணிகள் மற்றும் பிரதேச சபை பாதை ; கிழக்கு : கொழும்பு குருநாகல் பிரதான பாதை ; தெற்கு : அரச காணியில் அமைந்துள்ள மின் நெசவாலை மற்றும் நசீம் என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் மேற்கு: கிராமவாசிகளின் காணிகள் மற்றும் நசீம் என்பவர் உரிமம் கோரும் காணி எனும் இவ்வெல்லைகளுக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலதுமாகும். இது ஒரு ஏக்கர் முப்பத்தொன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச் (01ஏ.00றூ.31.50பே.) பரப்பளவுடையது. இது குருநாகல் காணி பதிவகத்தில் தொகுதி/ பக்கம் T 136/106 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2019.10.22.

1 - 446

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கங்கள் : 2245519

சானோ இம்பெக்ஸ்

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் 2019, திசெம்பர் 20 ஆந் திகதி கூடிய கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதான தீர்மானமாவது.

கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு K. V. A. D. C. K. விபுலசேன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, செத்தெம்பர் 01 ஆந் திகதிய 1422 மற்றும் 2015, நவெம்பர் 24 ஆந் திகதிய 1696 ஆம் இலக்க, கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC முறிகளின் கீழ் "சானோ இம்பெக்ஸ்" எனும் பெயர் மகுடத்தின் கீழ் தனியுடைமை வியாபாரத்தை நடாத்திச் செல்லும் இனாயதுல்லா மொஹமட் இர்ஷாட் என்பவர் கடப்பாடுடையவராக (பின்வரும் 1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்.)

கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு K. V. A. D. C. K. விபுலசேன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, யூன் 16 ஆந் திகதிய 1842 ஆம் இலக்க, கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC முறியின் கீழ் "சானோ இம்பெக்ஸ்" எனும் பெயர் மகுடத்தின் கீழ் தனியுடைமை வியாபாரத்தை நடாத்திச் செல்லும் இனாயதுல்லா மொஹமட் இர்ஷாட் என்பவர் கடப்பாடுடையவராக (பின்வரும் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்.)

கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு வருமதியாகவும் சேரவேண்டியும் இருப்பதனால் அம்முறியின் கீழ முப்பத்தொரு மில்லியன் எண்ணூற்று தொண்ணூற்று ஆறாயிரத்து நூற்று தொண்ணூற்று ஏழு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூபா 31,896,197.89) பணத்தொகை 2019.10.18 ஆந் திகதியன்று உள்ளவாறு கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளதாலும் மேற்படி முப்பத்தொரு மில்லியன் எண்ணூற்று தொண்ணூற்று ஆறாயிரத்து நூற்று தொண்ணூற்று ஏழு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூபா 31,896,197.89) பணத்தொகையும் அத்துடன் 2019.10.19 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை காலத்துக்கான ரூபா 28,250,000.00 பணத்தொகைக்கு 16.5% வருடாந்த வட்டியும், விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையேனும் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக அட்டவணையில்

நன்கு விபரிக்கப்படுபவையும் 1422, 1696 மற்றும் 1842 ஆம் இலக்க முறிகளினால் மேற்படி கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான பின்வரும் 1 ஆம், 2 ஆம் அட்டவணைகளில் விபரிக்கப் பட்டுள்ள ஆதனங்களும் வளவுகளும் கண்டி, மாவில்மட, லேவெல்ல ரோட், துட்டுகெமுனு மாவத்தையில் இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. I. W. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சியின் பணிப்பாளர் சபையினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**மேற்கூறிய முதலாம் ஆதனத்தின் அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர மெதபலாத்த யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, யட்டிநுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குருகம கிராம அலுவலர் பிரிவு, குருகம கிராமத்தில் அமைந்துள்ள "தெலன்கே வத்த மற்றும் தலகஹகும்புரே வத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் M. Z. ஆப்தீன் என்பவரினால் 1969.04.16 ஆந் திகதிய மேலும் துல்லியமாக 1989.04.16 ஆந் திகதி தயாரிக்கப் பட்ட வரைபட இல. 331 இல் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு 01 எனும் பகுதியின் எல்லைகளாவன - வடக்கு: கோனகன்கேகும்புர மற்றும் தெலன்கேகும்புர; கிழக்கு : S. L. A. ரஹீம் என்பவரினால் உரிமை கோரும் காணியை பிரிக்கும் மருத்துவ வேலி மற்றும் வரைபட இல. 1400 இன் லொட் 02 ; தெற்கு : பிலிமத்தலாவையிலிருந்து முருத்தலாவைக்கு செல்லும் பிரதான பாதை மற்றும் மேற்கு : M. L. M. மவ்பர் என்பவரிற்கு சொந்தமான மிகுதி காணித்துண்டு மற்றும் வரைபட இல. 1400 இன் லொட் 01 மற்றும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இக்காணியானது இருபத்து எட்டு தசம் இரண்டு ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.28.25பே.) பரப்பள வுடையது. மேலும் இது கண்டி காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் B 393/290 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் குறிப்பிடப்பட்ட லொட் இல. 01 அண்மித்த மீளளவையின் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர மெதபலாத்த யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, யட்டிநுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குருகம கிராம அலுவலர் பிரிவு, குருகம கிராமத்தில் அமைந்துள்ள "தெலன்கே வத்த மற்றும் தலகஹகும்புரே வத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் K. B. லன்சகாரநாயக்க என்பவரினால் 2009.09.01 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. 6800 இல் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு 01 எனும் பகுதியின் எல்லைகளாவன : வடக்கு : கோனகன்கேகும்புர மற்றும் தெலன்கேகும்புர; கிழக்கு : S. L. A. ரஹீம் என்பவரினால் உரிமை கோரும் (வரைபட இல. 1400 இல் விபரிக்கப்பட்டுள்ள லொட் 02) காணியின் மிகுதி பகுதி ; தெற்கு : பிலிமத்தலாவையிலிருந்து முருத்தலாவைக்கு செல்லும் பிரதான பாதை மற்றும் மேற்கு : M. L. M. மவ்பர் என்பவரினால் உரிமை கோரும் காணியின் மிகுதி பகுதி மற்றும் வரைபட இல. 1400 இல் விபரிக்கப்பட்ட லொட் 01 மற்றும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இக்காணியானது இருபத்து எட்டு தசம் இரண்டு ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.28.25பே.) பரப்பளவுடையது.

**மேற்கூறிய இரண்டாம் ஆதனத்தின் அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர மெதபலாத்த யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, யட்டிநுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிலிமத்தலாவை கிராம அலுவலர் பிரிவு, பிலிமத்தலாவை கிராமத்தில் அமைந்துள்ள "அஸ்வேதுமவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவை யாளர் K. B. லன்சகாரநாயக்க என்பவரினால் 2011.12.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. 7518 இல் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு 01 எனும் பகுதியின் எல்லைகளாவன - வடக்கு: நானுஓயா ; கிழக்கு : வரைபட இல. 432 இல் விபரிக்கப்பட்டுள்ள லொட் 01 ; தெற்கு: கண்டியிலிருந்து கொழும்புக்கு செல்லும் பிரதான பாதை மற்றும் மேற்கு : வரைபட இல. 432 இல் விபரிக்கப்பட்டுள்ள லொட் 03 மற்றும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள வரிப்பண இல. 398 இற்கு அமைய கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் இக்காணியானது பன்னிரெண்டு தசம் பூச்சியம் பேர்ச் (00ஏ.00றூ.12.00பே.) பரப்பளவுடையது. இது கண்டி காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் B 472/258 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேல் குறிப்பிடப்பட்ட லொட் இல. 01 அண்மித்த மீளளவையின் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர மெதபலாத்த யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, யட்டிநுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிலிமத்தலாவை கிராம அலுவலர் பிரிவு, பிலிமத்தலாவை கிராமத்தில் அமைந்துள்ள "அஸ்வேதுமவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் K. B. லன்சகாரநாயக்க என்பவரினால் 2015.05.02 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. 8290 இல் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு 01 எனும் பகுதியின் எல்லைகளாவன - வடக்கு: நானுஓயா ; கிழக்கு : வரைபட இல. 432 இல் விபரிக்கப்பட்டுள்ள லொட் 01 ; தெற்கு:

கண்டியிலிருந்து கொழும்புக்கு செல்லும் பிரதான பாதை மற்றும் மேற்கு : வரைபட இல. 432 இல் விபரிக்கப்பட்டுள்ள லொட் 03 மற்றும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள வரிப்பண இல. 398 இற்கு அமைய கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் இக்காணியானது பன்னிரெண்டு தசம் பூச்சியம் பேர்ச் (00ஏ.00றூ.12.00பே.) அல்லது 0.0304 ஹெக்டேயார் பரப்பளவுடையது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2020.01.21.

1 - 447

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல்.சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சியின் (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 2202212 மற்றும் 2245507

இனாயதுல்லா மொஹமட் இர்ஷாட்

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் 2019, திசெம்பர் 20 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமாவது.

"கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு K. V. A. D. C. K. விபுலசேன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, யூன் 16 ஆந் திகதிய 1841 ஆம் இலக்க முறியின்மீது, கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு இனாயதுல்லா மொஹமட் இர்ஷாட் என்பவர் கடப்பாடுடையவராக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு வருமதியான கொடுப்பனவை செலுத்த தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது முப்பத்தெட்டு மில்லியன் இருபத்தெட்டாயிரத்து நாநூற்று நாற்பத்து மூன்று ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூபா 38,028,443.91) பணத்தொகை 2019.10.18 ஆந் திகதியன்று உள்ளவாறு கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளதாலும் மேற்படி முப்பத்தெட்டு மில்லியன் இருபத்தெட்டாயிரத்து நாநூற்று நாற்பத்து மூன்று ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூபா 38,028,443.91) பணத்தொகையும் அத்துடன் 2019.10.19 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை காலத்துக்கான ரூபா 30,479,300.00 பணத்தொகைக்கு 16% வருடாந்த வட்டியும், மற்றும் ரூபா 5,840,000.00 பணத்தொகைக்கு 28% வருடாந்த வட்டியும், விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுபவையும் 1841 ஆம் இலக்க முறியினால் மேற்படி கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC இற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனமும் வளவுகளும் கண்டி, மாவில்மட, லேவெல்ல ரோட், துட்டுகெமுனு மாவத்தையில் இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. I. W. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் PLC பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

#### மேற்கூறிய ஆதனத்தின் அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர மெதபலாத்த யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, யட்டிநுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிலிமதலாவ கிராம அலுவலர் பிரிவில், பிலிமதலாவ கிராமத்தில் அமைந்துள்ள "எஸ்வெத்துமேவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் K. B. லங்சகாரநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.12.04 ஆந் திகதிய 7518 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 எனும் காணியின் எல்லைகள் - வடக்கு : நானுஓய; கிழக்கு : வரைபட இல. 432 இல் குறிக்கப்பட்ட லொட் 01 ; தெற்கு : கொழும்பு-கண்டி பிரதான பாதை மற்றும் மேற்கு : வரைபட இல. 432 இல் குறிக்கப்பட்ட லொட் 03 எனும் இவ்வெல்லைகளுக்குள் அமைந்துள்ள வரிப்பண இல. 398 எனும் சொத்தும், கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது பன்னிரெண்டு பேர்ச் (00ஏ.00றூ.12பே.) பரப்பளவானது. இது கண்டி காணி பதிவகத்தில் இல. B 472/258 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

#### மேற்கூறிய லொட் 01 எனும் காணித்துண்டு அண்மையில் செய்யப்பட்ட அளவையின் பிரகாரம் கீழ்க்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர மெதபலாத்த யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, யட்டிநுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிலிமதலாவ கிராம அலுவலர் பிரிவில் பிலிமதலாவ கிராமத்தில் அமைந்துள்ள "எஸ்வெத்துமேவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் K. B. லங்சகாரநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.05.02 ஆந் திகதிய 8290 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 எனும் காணியின் எல்லைகள் - வடக்கு : நானுஓய; கிழக்கு : வரைபட இல. 432 இல் குறிக்கப்பட்ட லொட் 01 ; தெற்கு : கொழும்பு-கண்டி பிரதான பாதை மற்றும் மேற்கு : வரைபட இல. 432 இல் குறிக்கப்பட்ட லொட் 03 எனும் இவ்வெல்லைகளுக்குள் அமைந்துள்ள வரிப்பண இல. 398

எனும் சொத்தும், கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது பன்னிரெண்டு பேர்ச் (00ஏ.00றூ.12பே.) அல்லது 0.0304 ஹெக்டயார் பரப்பளவானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2020.01.21.

1 - 449

---

## பான் ஏஷியா வங்கித்தொழிற் கூட்டுத்தாபனம் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பான் ஏஷியா வங்கித்தொழிற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளர்களின் பெயர்கள் : கல்யாணி ஜயவர்தன மற்றும் ஹெதுஹாமிகே கமலாவதி
கிளை : அநுராதபுரம்

பான் ஏஷியா வங்கித்தொழிற் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் 2020, ஒற்றோபர் 27 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"கடப்பாட்டாளர்களாக" கல்யாணி ஜயவர்தன மற்றும் ஹெதுஹாமிகே கமலாவதி என்போரும், "ஈடுவைப்பவராக" ஹெதுஹாமிகே கமலாவதி என்பவரும், PQ 48 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட பான் ஏஷியா வங்கித்தொழிற் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் சார்பில் அநுராதபுரத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. வீ. ஏ. திசாநாயக்க என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, மே 22 ஆந் திகதிய 8999 ஆம் இலக்க முதனிலை ஈட்டுமுறிமீதும் 2018, ஒற்றோபர் 25 ஆந் திகதிய 9292 ஆம் இலக்க இரண்டாம்நிலை ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளனராதலாலும்.

அத்துடன் சொல்லப்பட்ட 8999 ஆம். 9292 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின்மீது 2020, மாச்சு 04 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை நான்கு மில்லியன் முந்நூற்று எழுபத்தோராயிரத்து முந்நூற்றியிருபத்தி நான்கு ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 4,371,324.41) கொண்ட பணத் தொகைமீது ஆண்டொன்றுக்கு 23% சதவீதத்திலான வட்டியுடன் 2020, மாச்சு 03 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் நான்கு மில்லியன் அறுநூற்று நாற்பத்தேழாயிரத்து முந்நூற்றியிருபத்தெட்டு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 4,647,328.71) கொண்ட பணத்தொகை, (இதனகத்துப்பின்னர் சில வேளைகளில் "வங்கி" எனவழைக்கப்படும்) பான் ஏஷியா வங்கித்தொழிற் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இற்கு இப்போது வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

இத்தால் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றது:-

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் நியதிகளின்படி, கொலன்னாவ, விஹார மாவத்தையில் 182/3, (50/3) ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலதாரர் துசித கருணாரத்ன என்பவருக்கு, மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடன் சேர்த்து சொல்லப்பட்ட நான்கு மில்லியன் அறுநூற்று நாற்பத் தேழாயிரத்து முந்நூற்றியிருபத்தெட்டு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 4,647,328.71) கொண்ட பணத் தொகையையும் சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலனவான செலவுதொகைகளையும் பணங்களையும் அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்டதும் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனைசெய்வதற்கு அதிகாரமளிக்கப் பட்டு தத்துவமளிக்கப்படுதல் வேண்டுமென்றும்;

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டத்தில், தம்புத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில் இல. 424, தம்மென்னகம கிராம அலுவலர் பிரிவில் தம்புத்தேகம தொடர்வழி 07-மைலேவ கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட வலயம் 01 110053 ஆம் இலக்க வரைபடத்தில் 05 ஆம் இலக்க வெளிக்களத்தாளில் காணித்துண்டம் இல. 972 என வடையாளமிடப்பட்டதுமான அவ்வரச காணி அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : காணித்துண்டம் இல. 971 ; கிழக்கு : காணித்துண்டம் இல. 971, 196 மற்றும் 973; தெற்கு : காணித்துண்டம் இல. 973, 257 மற்றும் 246 அத்துடன்; மேற்கு : காணித்துண்டம் இல. 246 மற்றும் 971; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடம், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் அணுகுவழி எனவடையாளமிடப்பட்ட வீதியிலும் அதன்மேலுமான செல்வழியுரிமையுடன் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் இரண்டு ஒன்பது ஹெக்டேயர்களை (0.1029 ஹெக்.) கொண்டுள்ளதுடன் அநுராதபுரம் மாவட்டக் காணிப் பதிவகத்தில் P03/43 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டத் தில், ஹேவாகம் தம்புத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில்

இல. 424, தம்மென்னகம கிராம அலுவலர் பிரிவில் தம்புத்தே கம தொடர்வழி 07- மைலேவ கிராமத்தில் அமைந்துள்ளதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் சீ. எஸ். லியனகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017.01.10 ஆந் திகதிய CS/2017/08 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 972 எனவடையாளமிடப்பட்டதுமான மேற்கூறப்பட்ட காணியை மீள் நில அளவை செய்த பின்னர் அதன் எல்லைகள் பின்வருமாறு- வடக்கு : காணித்துண்டம் இல. 971 ; கிழக்கு : காணித்துண்டம் இல. 971, 196 மற்றும் 973 ; தெற்கு : காணித்துண்டம் இல. 973, 257 மற்றும் 246 அத்துடன் ; மேற்கு : காணித்துண்டம் இல. 246 மற்றும் 971. பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடம், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் இரண்டு ஒன்பது ஹெக்டேயர் (0.1029 ஹெக்.) அல்லது ஒரு றூட் பூச்சியம் தசம் ஆறு எட்டு பேர்ச் (0ஏ.1றூ.0.68பே.) கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

அருண குருகே,
உதவி முகாமையாளர் /அறவீடுகள்.

1-450

---

### பேன் ஏஷியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பேன் ஏஷியா பேக்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : விதான அப்புஹாமிலாகே ரணதுங்க
கிளை : கதுருவெல

பேன் ஏஷியா பேக்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் 2020, திசெம்பர் 17 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"கடப்பாட்டாளர்களாக/ ஈடுவைத்தவரான" விதான அப்புஹாமிலாகே ரணதுங்க என்பவர், பதிவு இல. PQ 48 ஆம் ஐக் கொண்ட பேன் ஏஷியா பேக்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் பொலநறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஏ. அபேவர்தன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013, மே 07 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை மிதக்கும் ஈட்டுமுறி இல. 1855 மற்றும் 2017, மாச்சு 08 ஆந் திகதியிடப்பட்ட இரண்டாம் நிலை மிதக்கும் ஈட்டுமுறி இல. 2912 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால்;

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பிஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு வரவேண்டியும் உள்ளது. கொடுப்பனவு திகதி வரை 1855 மற்றும் 2912 ஆகிய இலக்கங்களையுடைய ஈட்டுமுறிகளின் மீது 2020, திசெம்பர் 02 ஆந திகதி வரையான ஆரம்ப பணத்தொகை மற்றும் வட்டியாக ரூபா ஏழு மில்லியன் முந்நூற்று நாற்பத்து நான்காயிரத்து நாநூற்று தொண்ணூற்று நான்கு ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 7,344,494.76) பணத்தொகையும் அத்துடன் 2020, திசெம்பர் 03 ஆந் திகதியிலிருந்து ஆறு மில்லியன் நூற்று அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்து நான்கு ரூபா பதின்மூன்று சதம் (ரூபா 6,168,754.13) பணத்தொகைக்கு 19% வருடாந்த வட்டியுடனும் தற்போது வரவேண்டியும், சேரவேண்டியுமுள்ளது.

இத்தால் மூலம் தீர்மானிக்கப்படுவதாவது :

மேற்சொல்லப்பட்ட முழு பணத்தொகையான ரூபா ஏழு மில்லியன் முந்நூற்று நாற்பத்து நான்காயிரத்து நாநூற்று தொண்ணூற்று நான்கு ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 7,344,494.76) ஐ 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்கள், செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான வட்டியுடன் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கண்டி, மாவில்மட, துட்டுகெமுனு மாவத்தை, இல. 369/1 ஐச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

#### மேற்கூறப்பட்ட ஆதனத்தின் அட்டவணை

வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, தமன்கடுவ பிரதேச செயலக பிரிவு, மெத பத்துவ, அலுத்வெவ இல. 72B, கிராம அலுவலர் பிரிவு, கதுருவெல கிராமம், உடவெலகமயில் அமைந்துள்ள காணியின் உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி வரைபட இல. F C P PO 34 இல் காணித்துண்டு 28 என விபரிக்கப்பட்டுள்ள "பட்டியதமான" என்று அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் W. A. பியதாச அவர்களினால் தயாரிக்கப்பட்டு 08.08.1998 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 127/98 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் 1 மற்றும் 2 ஆகியவற்றின் மீளளவையாகும். இது உரிமம் பெற்ற நில அளவையாளர் W. C. டயஸ் அவர்களினால் தயாரிக்கபட்டு 2005, சனவரி 15 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபட இல. 823 இல் காணித்துண்டு 02 என அடையாளமிடப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கு : வரைபட இல. F C P PO 34 இல் காணித்துண்டு 220;

கிழக்கு : வரைபட இல. F C P PO 34 இன் காணித்துண்டு 33; தெற்கு : வரைபட இல. F C P PO 34 இன் காணித்துண்டு 323 மற்றும் F C P PO 34 இன் 321 இன் ஒரு பகுதியின் W. A. ரணதுங்க என்பவரின் அதிகபடியான பயிர்ச்செய்கை மற்றும் மேற்கு : இவ்வரைபடத்தின் காணித்துண்டு 1 மற்றும் இக்காணியானது ஒரு ஏக்கர் இரண்டு றூட் ஐந்து தசம் ஐந்து பேர்ச் (01ஏ.02றூ.5.5பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இக்காணியானது கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணியின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதியாகும்.

வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச செயலக பிரிவு, மெத பத்துவ, அலுத்வெவ இல. 72 B, கிராம அலுவலர் பிரிவு, கதுருவெல கிராமம், உடவெலகமயில் அமைந்துள்ள "பட்டியதமான" எனும் காணி நில அளவையாளர் நாயகத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவரினால் தயாரிக்கப்பட்டு வரைபட இல. F C P PO 34 இல் காணித்துண்டு 28 என அடையாமிடப்பட்டு பிரித்தெடுக்கப்பட்டுள்ள காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு : காணித்துண்டுகள் 334, 220 ; கிழக்கு : காணித்துண்டு 33 ; தெற்கு : காணித்துண்டு 221 மற்றும் மேற்கு : காணித்துண்டு 320 மற்றும் இக்காணியானது மூன்று ஏக்கர், பதினொரு பேர்ச் (03ஏ.00றூ.11பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

அருண குருகே,
உதவி முகாமையாளர் - அறவீடுகள்.

1-451

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.